2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2024) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் இருப்பதுபோல், தமிழ்நாட்டில் தமிழ்நாடு ஆணையம் என்கிற பெயரில் அமைக்கப்பெறுவது சிறப்புமிக்கது; வரவேற்புக்குரியது; பாராட்டுக்குரியது. ஆனால், அந்தச் சட்டத் திருத்தத்தில் எப்படி ஒன்றிய அரசு தேசிய நெடுஞ்சாலை மற்றும் தனியார் துறை பங்களிப்பு என்றிருக்கிறதோ, அதே மாதிரி தமிழ்நாட்டிலும் தமிழ்நாடு என்ற ஆணையத்துடன் தனியார் என்கிற வார்த்தையும் நம்முடைய அறிவிப்பில் ஏற்கெனவே இடம்பெற்றிருக்கிறது. இப்போது ஒன்றிய அரசு தமிழ்நாடு முழுவதும் இந்தியாவில்

@ 21-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

எந்த மாநிலத்திலும் இல்லாத வண்ணம் சட்டத்திற்குப் புறம்பாக 60 கிலோ மீட்டருக்கு ஒரு சுங்கச்சாவடி அமைக்கப்பெற வேண்டுமென்பதற்குப் பதிலாக, 10 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர், ஒரு கிலோ மீட்டர் அளவிலெல்லாம் சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டிருப்பது சட்டத்திற்கு விரோதம் என்பதை இந்த மாமன்றத்தில் நானே எடுத்து வைத்திருக்கிறேன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இதற்காக பிரத்யேகமாக முயற்சி எடுத்துக்கொண்டு, பல கடிதங்களை எழுதி, ஒன்றிய அமைச்சரிடம் வலியுறுத்தி, இந்தச் சட்டத்திற்குப் புறம்பான சுங்கச்சாவடிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்கின்ற வகையில் கடிதத்தை எழுதியிருப்பதாக எனக்குத் தகவல் தெரிவித்தார். ஆக, இப்படியொரு ஆணையத்தை அமைப்பதை வரவேற்கின்ற அதே சூழலில், தனியார் துறையை நாளைக்கு நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்கான ஆணையத்திற்குள் கொண்டு வந்தால், ஒன்றிய அரசைப் பின்பற்றி நாமும் சுங்கச்சாவடிகளை அமைக்க வேண்டிய ஒரு சூழல் ஏற்படும். மாண்புமிகு தளபதி அவர்கள் தலைமையிலான அரசில், தாங்கள் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் வரலாற்றில் இல்லாத வண்ணம், மாநிலத்தில் மூன்று சுங்கச்சாவடிகளை அகற்றியிருக்கிறீர்கள். மீண்டும் தனியாரோடு இந்த ஆணையத்தை இணைத்தீர்கள் என்று சொன்னால், சுங்கச்சாவடிகள் அமைக்க வேண்டுமென்கின்ற ஒரு நிர்ப்பந்தத்திற்கு நாம் ஆளாவோம். ஆதலால், இந்தச் சட்டத் திருத்தத்தில் தனியார் சுங்கச்சாவடிகள் அமைப்பதைத் தவிர்க்கின்ற முறைமையை உட்படுத்த வேண்டுமென்கிற என்னுடைய கருத்தை இந்தச் சட்டமுன்வடிவு ஆய்வினூடாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேசிய இந்தக் கருத்துகள், அடுத்து வரக்கூடிய Bill–க்குரியது. நீங்கள் அடுத்து வரக்கூடிய Bill–க்கு பேசியதாக நான் இதனைப் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு, 2024 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

பிற்பகல் 1–30

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2024), மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

@ 21-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.